<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு.**</u>

<u>**O.S.No.304/2020**</u>

| | |
|---|---|
| வாதி தரப்பு சாட்சி | **வா.சா.1** |
| பெயர் | திருமதி. ஜெயலட்சுமி |
| கணவரின் பெயர் | திரு. சுந்ரபாண்டியன் |
| கிராமம் | வடஇலுப்பை |
| வட்டம் | வெம்பாக்கம் |
| தொழில் | கடை வைத்துள்ளேன் |
| வயது | 43 |

2025–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10–ஆம் நாளன்று, திரு.M.விக்னேஷ் பிரபு, M.L., கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் 1969–ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>முதல் விசாரணை</u> :**

1. நான் இந்த வழக்கில் 1–ம் வாதி ஆவேன். எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை முதன்மை சாட்சியமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதனை நான் சொல்லிதான் எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதனை படித்து பார்த்து, வழக்கறிஞர் படித்து சொல்ல சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 1. | - | தாவா சொத்துக்கள் எனது கணவர் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டா (பட்டா எண். 161) - இணைய வழி நகல் - வா.சா.ஆ.1. |
| 2. | 25-09-2020 | 1 முதல் 3 பிரதிவாதிகள் 4-ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் இணைய வழி நகல் - வா.சா.ஆ.2. |
| 3. | 08-06-1997 | எனக்கும் சுந்தரபாண்டியன் என்பவருக்கும் திருமணம் நடந்ததற்கான திருமண அழைப்பிதழ் - அசல் - வா.சா.ஆ.3. |
| 4. | - | எனக்கும் சுந்தரபாண்டியன் என்பவருக்கும் நடந்த திருமணத்திற்கான திருமண புகைப்படம் - வா.சா.ஆ.4. |
| 5. | - | எனது மற்றும் 2, 3 வாதிகளின் ஆதார் அட்டை - நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) முறையே வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7. |

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்/- M. விக்னேஷ் பிரபு
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**